# 1

# விதிக்கப்பட்டவை

மனிதப் பிறவி எடுக்கும் போது ஆத்மா, அதற்கு விதிக்கப்பட்டவற்றை விதியாக உடன் கொண்டு வர நேரிடுகிறது.

**'புண்ணியம் ஆம் பாவம்போம் போனநாள் செய்த அவை**
**மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்'**

என்கிறது 'நல்வழி' இலக்கியம். போன பிறவிகளில் செய்த நல்வினை, தீவினைகளே இப்பிறவி எடுக்கும் போது நாம் கொண்டு வந்த பொருள் என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது. நல்வினை, தீவினைகளை எடுத்துக் கொண்டு

வருவதால் தான் குழந்தை பிறக்கும் போது தன் இரு உள்ளங்கைகளையும் மூடிக் கொண்டு பிறக்கிறதோ!!

முற்பிறவிகளில் ஒருவர் செய்த நல்வினை, தீவினைகளின் தொகுப்பு சஞ்சிதம் எனப்படும். சஞ்சிதம் எனும் வினைத்தொகுப்பிலிருந்து எந்தெந்த வினைகளை இப்பிறவியில் அளித்தால் உயிரி திருந்துமோ அவற்றைப் பிரார்த்த வினையாக மாற்றி, இப்பிறவியில் அனுபவிக்கச் செய்கிறார் இறைவன். இதுவே 'ஊழ்வினை, விதிக்கப்பட்ட வினை' எனப்படுகிறது. கிராமங்களில் 'பிராப்தம் இருந்தால் நடக்கும்' என்று கூறுவது இந்த பிரார்த்த வினையைத்தான். முற்பிறவியில் பிறருக்கு நன்மைகளைச் செய்தவர்கள் இப்பிறவியில் சுகப்படுவார்கள் என்பதை 'கொடுத்து வச்சவங்க, சுகமாக இருக்காங்க' என்று கூறுவதுண்டு.

**'பேறுஅழிவு சாவுபிறப்பு இன்பம்துன்பம் என்ற**
**ஆறுஉள அந்நாள் அமைந்தன - தேறி**
**அவைஅவை வந்தால் அழுங்காது விம்மாது**
**இவைஇவை என்று உணரற் பாற்று'**

என்கிறது 'நல்வழி'.

பிறப்பு, இறப்பு, ஆயுட்காலம், பிணைக்கும் உறவுகள், பெறத்தக்கன, இழக்கத்தக்கன இவை ஆறும் முன்வினையைச் சார்ந்தன. முன்பு நாம் விதைத்த விதைகள்தான் இப்போது நமக்கு விதியாக வந்து விளைந்துள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை. நம்

வினைகளுக்கு ஏற்ப இறைவனால் விதிக்கப்படுவதால் இது 'ஆதி தெய்வீகம்' என்று கூறப்படுகிறது. நம் முன்வினையே இதற்கு காரணமாவதால் நல்லூழை அனுபவிக்கும் போது மகிழாமலும், தீயூழை அனுபவிக்கும் போது வருந்தாமலும் இருக்க வேண்டும்.

'நல்வழி'ப் பாடல்கள் மூலம் நல்வழிப்படுத்தும் ஔவைப் பாட்டி,

**'செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்த வருமோ இருநிதியம்?'**

என்று கேட்கிறார். முற்பிறவியில் செய்த பாவத்தை அனுபவிக்க வேண்டியிருக்க 'தெய்வம் ஏன் எனக்கு வறுமையைத் தந்தது என்று தெய்வத்தை நிந்தனை செய்தால் செல்வத்தை அடைய முடியுமா?' என்று கேட்கிறார்.

**ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்த தாயினும் ஊழ்**
**கூட்டும் படியன்றி கூடாவாம்.**

என்றும் கூறுகிறார். பொருள் ஈட்டுவதற்கு ஒருவன் பல வழிகளில் முயற்சி செய்தாலும், வினைப்பயன் தீர்மானிக்கும் அளவுக்கு மேல் பொருள் சேராது என்று தெரிகிறது.

தகுதியானவர்களுக்கு, தக்க சமயத்தில் பலனை எதிர்பாராமல் உதவி செய்வதால் கிடைக்கும் புகழ்

நிலையான புகழாகும். இத்தகைய புகழைத் தவிர உயிருக்கு ஊதியம் வேறு எதுவும் இல்லை என்பதை,

*'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு.'*

என்ற குறள் உணர்த்துகிறது. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்று தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறுவது இத்தகைய புகழைத்தான். இங்கு புகழ் என்பது முற்பிறவி யில் செய்த நல்வினைப் பயனான புண்ணியத்தைக் குறிப்பதாகக் கருதலாம். 'ஊழ்' என்ற அதிகாரத்தில் இப்புண்ணியப்பலன் 'ஆகூழ்' என்று குறிப்பிட்டுள்ளது. வங்கியில் நாம் போட்டு வைத்துள்ள பணத்தைத் தேவை யான போது எடுத்துப் பயன்படுத்தி நன்மையடைவது போல, முற்பிறவியில் செய்த நல்வினைப் பயனான புண்ணியப் பலனை இப்பிறவியில் பயன்படுத்தி நிம்மதி யாக வாழலாம். ஆகவேதான் திருவள்ளுவர் 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்கிறார். அத்தகைய புண்ணியக் கணக்கு இல்லையெனில் தோன்றாமலிருப்பதே நன்று! என்றும் கூறுகிறார்.

முன்வினைப் பயனைப் பற்றி நாலடியாரிலும் பல பாடல்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

*'நல்லார் நயவர் இருப்ப நயமிலாக்*
*கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை*
*வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்*
*நினைப்ப வருவதொன் றில்.'*

பெரியவர்கள் காட்டிய வழியில் நடந்து கொள்ளும் நல்லவர்கள் பலர் பணமின்றி ஏழைகளாகவும், நீதி நெறிப்படி நடந்து கொள்ளாத தீயவர்கள் பலர் பொருள் படைத்த செல்வந்தர்களாகவும் இருப்பதற்கு காரணம், அவர்களது முன்வினையே காரணம் என்பதை மேற்கண்ட பாடல் உணர்த்துகிறது.

'விதி' என்று எதுவும் இல்லை. அவரவர் மதியை எவ்வாறு பயன்படுத்துகிறார்களோ, அதற்கேற்ப அவரவர்க்கு வாழ்வு அமையும் என்று சிலர் இக்காலத்தில் கூறுவது போல முற்காலத்திலும் சிலர் கூறியிருக்கக்கூடும் என்பது கீழ்க்கண்ட பாடல் மூலம் தெரிகிறது.

**'உருவும் இளமையும் ஒண்பொருளும் உட்கும்**
**ஒருவழி நில்லாமை கண்டும் - ஒருவழி**
**ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை உடம்பிட்டு**
**நின்றுவீழ்ந் தக்க துடைத்து.'**

உருவ அமைப்பு, இளமை, செல்வம், கௌரவம் ஆகியவை எல்லோரிடத்தும் ஒரே மாதிரியாக இல்லாமலிருப்பதைக் காண்கிறோம். அத்தகைய மாறுபாடுகளுக்கு காரணம் அவரவர் பழவினைப்பயனே என்பதைப் புரிந்து கொள்ளாமல் ஒழுக்கமின்றி, சுயநலம் கொண்டு வாழ்பவர்கள் வாழ்க்கை விரைவில் அழிந்து போகும் என்று தெரிகிறது.

முன்வினைப்பயன் என்ற ஒன்று இல்லையென்றால், எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரியான வளத்துடன்

நலத்துடன் அல்லவா பிறந்திருக்க வேண்டும்? அழகிலும், நிறத்திலும், உடல் நலத்திலும், எத்தனை எத்தனை வேறுபாடுகளைக் காண்கிறோம்? பிறக்கும் போதே உடல் ஊனத்துடன் பிறக்கும் குழந்தைகளைக் கண்டும் வருந்துகிறோம். ‘விதி’ என்ற ஒன்று இல்லையென்றால் இத்தகைய மாறுபாடுகளும் வேறுபாடுகளும் காணப் படுமா? பிறக்கும் போதே அப்பிறவி முழுவதிற்குமாக அமைந்துவிட்ட ஊழ்வினைப் பயனானது விதிக்கப்பட்டதைவிடத் தன்அளவில் கூடாது, குறையாது, மாறியும் தோன்றாது, துன்பப்படும்போது ஊன்றுகோலாக வும் உதவி புரியாது. விதிக்கப்பட்டதை அனுபவித்தே தீர வேண்டுமென்பதால் எதற்காக வருத்தப்பட வேண்டும்? என்று கேட்கிறது கீழ்க்கண்ட ‘நாலடியார்’ பாடல்.

**‘சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா**
**உறுகாலத் தூற்றாகா ஆமிடத்தே ஆகும்**
**சிறுகாலைப் பட்ட பொறியும் அதனால்**
**இறுகாலத் தென்னை பரிவு.’**

இதிகாசங்களிலும், புராணங்களிலும் விதியின் வலிமையைப் பறைசாற்றும் எடுத்துக்காட்டுகள் ஏராளம். இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடைபெறப் போகிறது என்ற செய்தியை, முதலில் சொன்ன கூனிக்கு கைகேயி ஓர் விலையுயர்ந்த மாலையைப் பரிசாகத் தந்தாள். பிறகு கூனியின் சூழ்ச்சியால் மனம் திரியப்பெற்ற கைகேயி, தசரத மகாராஜாவிடம் சென்று தனக்கு முன்பு அளித்த வரத்தைக் கேட்டாள். 14 வருடங்கள் இராமன் காட்டில்

வாழ வேண்டும் என்றும், தன் மகன் பரதன் அரசாட்சி புரிய வேண்டும் என்ற வரத்தை அளிக்குமாறு வற்புறுத்த, மறுக்க இயலாத மன்னன் 'அவ்வாறே ஆகட்டும்' என்று கூறி மயங்கி விழுந்தான். அரசனுடைய ஆணையை கைகேயி இராமனிடம் கூறிய போது அதை மகிழ்ச்சியுடன் இராமன் ஏற்க, இலட்சுமணன் மிக்க ஆவேசப்பட்டான். 'இது நம் அன்னை கைகேயியின் பிழையல்ல, விதியின் பிழை' என்று கூறி இராமன் இலட்சுமணனின் ஆவேசத்தை அடக்கினார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், இலட்சுமணனே விதியைப் பற்றி பேசுவதைக் கேட்கிறோம். வனத்தில், சீதை விரும்பிய மானைப் பிடிக்க இராமர் முயன்ற போது இலட்சுமணன், 'அண்ணா, அது மாயமான். அதைப் பிடிக்க முயற்சி செய்ய வேண்டாம்' என்று தடுத்தும் இராமர் கேட்காமல் மானின் பின்னே ஓடினார். அதைக் கண்ட இலட்சுமணன், விதியை வெல்ல இயலுமா? என்று எண்ணி வருந்தினான். இந்த நிகழ்ச்சியைப் பற்றி படித்த போது,

**'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்.'**

என்ற குறள் நினைவுக்கு வருகிறது. ஊழை விட வலியது ஏதுமில்லை. எது தடுத்தாலும் அது தடைகளை நீக்கி முன்வந்து நிற்கும் என்பது தெரிகிறது.

விதியின் வலிமையை மூதுரையும் எடுத்துரைக்கிறது.

**'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்**
**நாழி முகவாது நால்நாழி - தோழி!**
**நிதியும் கணவனும் நேர்படினும் தத்தம்**
**விதியின் பயனே பயன்.'**

சகலவிதமான வாய்ப்பும், வசதிகளும் இருந்தாலும் விதிப்பயன் இருந்தால்தான் அவற்றை அனுபவிக்க முடியும். ஒரு பாத்திரத்தில் ஆழ்கடல் நீரை அமுக்கி, அழுத்தி மொண்டாலும், அதன் அளவைவிட அதிக அளவு நீர் அதில் நிரம்பாது. அதுபோலவே அவரவர்களுடைய பழவினைப் பயனுக்குத் தக்கவாறே, செல்வத்தின் பயனையும் வாழ்க்கைத் துணையின் பயனையும் அனுபவிக்க முடியும் என்பது தெரிகிறது.

**'கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்**
**முற்பவத்தில் செய்த வினை.'**

என்ற மூதுரைப் பாடல், விதியின் வலிமையை எடுத்துரைக் கிறது. கற்பகக்கனி கிடைக்கும் என்று கற்பக மரத்திடம் சென்றவர்களுக்கு, அந்த மரம் கற்பகக் கனியைத் தராமல் காஞ்சிரங்காயைத் தந்தால், அதற்குக் காரணம் அவர்களின் விதிப்பயனேயன்றி அவர்களின் குற்றம் இல்லை. ஆகவே முன்வினைப் பயனை ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும் என்று தெரிகிறது.

எண்ணற்ற பசுக்கள் உள்ள மந்தையில் ஒரு இளம் கன்றை விட்டால், அது நேராகத் தன் தாய்ப் பசுவையே சென்று அடையும். அதுபோலவே முற்பிறவிகளில் செய்த வினைப்பயனும், தன்னைச் செய்தவரை தேடிச் சென்று தப்பாமல் அடையும் என்பது நாலடியார் உணர்த்தும் உண்மை.

**'உடம்பும் கிளையும் பொருளும் பிறவும்**
**தொடர்ந்து பின்செல்லாமை கண்டும் அடங்கித்**
**தவத்தொடு தானம் புரியாது வாழ்வார்**
**அவர்தம் கழிகின்ற நாள்.'**

விதவிதமாக அலங்கரித்து மகிழ்ந்த இந்த உடம்பும், அன்பு பாராட்டும் சுற்றத்தார்களும், ஓடிஓடி உழைத்தும், தேடித்தேடி ஓடியும் சேர்த்த செல்வமும், பிறவும் அவற்றிற்கு உரியவர் இறந்து விட்டால் அவருடன் செல்வதில்லை. இதை அறிந்திருந்தும் நற்செயல்களைச் செய்யாமல் வாழும் நாட்கள் பயனின்றி வீணே கழிகிற நாட்களாகும். பட்டினத்தார் கூறியபடி,

**'கைத்தலம் மேல்வைத்தழும் மைந்தரும் சுடுகாட்டுமட்டே**
**பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே.'**

இந்த இருவினைகளே நமக்கு விதிக்கப்பட்டவை களாகும்.

★★★

## 2

# விதிக்கப்படுபவை

முற்பிறவிகளின் எண்ணம், சொல், செயல்கள் விதியாகச் செயல்பட்டு, இப்பிறவி வாழ்வை நிர்ணயிக்கின்றன என்பதை முன் அத்தியாயத்தில் பார்த்தோம். சஞ்சிதம், பிராரத்தம் என்பனவற்றையும் அறிந்தோம். இப்பிறவியில் நம் எண்ணம், சொல், செயல்களின் விளைவுகள் ஆகாமியம் எனப்படும். விருப்பு, வெறுப்பின்றி செயல்படும் போது ஆகாமிய வினை ஏற்படுவது இல்லை. விலங்குகள் விருப்பு வெறுப்பு இன்றி செயல்படுவதால் அவற்றிற்கு ஆகாமிய வினை இல்லை. நமது செயல்கள் பெரும்பாலும், விருப்பு வெறுப்பை அடிப்படையாகக் கொண்டே நடைபெறுவதால், ஆகாமிய வினை உண்டு. ஆகாமிய வினையின் ஒரு பகுதி

இப்பிறவியிலேயே அதற்குரிய பலனை அனுபவிக்கிறது. மற்றவை அடுத்த பிறவியில் அனுபவிக்கப்படும்.

ஒரு பிறவியில் செய்த சில வினைகளுக்கு, அப்பிறவியிலேயே பலன்கள் விதிக்கப்படுவதற்கு பல உதாரணங்களை நாம் புராணங்களிலும் காணலாம். நமது வாழ்க்கையிலும் நம்மைச் சுற்றியுள்ளோர் வாழ்க்கையிலும் உணரலாம். பொறாமைப்படுவோர், பெண்ணாசை கொண்டோர், கோள் சொல்வோர், பிறர் துன்பத்தில் இன்பம் காண்போர் இப்பிறவியிலேயே தண்டிக்கப் படுவார்கள் என்கிறது இந்து தர்ம சாஸ்திரம். அவை அந்தந்த பிறவியிலேயே விதிக்கப்படுபவை. சரீரத்தால் செய்த கன்மத்தை சரீரத்தாலும், வாக்கினால் செய்த கன்மத்தை வாக்கினாலும், மனதால் செய்த கன்மத்தை மனதாலும் அனுபவித்தே தீர வேண்டும்.

**'பாவம் பெருகப் பழிபெருகத் தன்ஓம்பி**
**ஆவது ஒன்று இல்லை அறன்அழித்துப் - பாவம்**
**பெறாஅ முறைசெய் பொருவுஇல் யமன்கீழ்**
**அறாஉண்ணும் ஆற்றவும் நன்று.'**

என்ற அறநெறிச்சாரப் பாடல் 'பாவமும் பழிச்சொல்லும் பெருகும்படி வாழும் தன்னலம் மிக்க வாழ்க்கையில் யாருக்கும் எந்தவிதமான பயனும் ஏற்படாது. இவ்வாறு வாழ்பவர்களை யமன் பொறுத்துக் கொள்ள மாட்டான், தண்டிப்பான்' என்று தெளிவுபடுத்துகிறது. ஆகவே பழி நேராதவண்ணம் வாழ வேண்டும்.

தாங்கள் செய்யும் வினைப்பயனே அல்லாமல் தங்களுடன் கூட வருவது வேறு ஒன்றும் இல்லை, என்பதை உணர்த்தும் இலக்கியப் பாடல்கள் ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல! நல்லோர் இடும் சாபம் அப்பிறவியிலேயே பலிக்கும் என்பதற்கான எடுத்துக் காட்டுகள் பல. அவற்றுள் அனைவரும் அறிந்த ஒன்று சிரவணனின் பெற்றோர் தசரத மன்னனுக்கு அளித்த சாபமாகும்.

கண் பார்வையற்ற, வயதான தன் தாய் தந்தையை, இரு கூடைகளில் அமர வைத்து காவடியாகச் சுமந்து கொண்டு, யாத்திரை செல்லும் அருந்தவப் புதல்வன் சிரவணன். அவர்கள் தாகத்தைத் தீர்க்க ஓர் ஓடையில் நீர் எடுக்கச் சென்றான். அவன் ஒரு குவளையில் நீர் மொள்ளும் போது ஏற்பட்ட சப்தம், ஒரு விலங்கு நீரை உறிஞ்சுவது போல் சற்று தொலைவில் இருந்த தசரத மன்னனுக்கு கேட்க, அந்த திசையை நோக்கி அம்பை எய்தான். இடையில் இருந்த செடி கொடிகள் மறைத்ததால் உருவத்தைக் காணாமல் சப்தத்தை மட்டும் துல்லியமாகக் கேட்டு, கவனித்து எய்த அம்பு சிரவணன் உடலை ஊடுருவி அவனை மாய்த்தது. உண்மையறிந்த தசரதன் தன் தவறுக்கு பெரிதும் வருந்தினான். மகனின் மறைவையறிந்த சிரவணனின் பெற்றோர், தங்கள் மகனின் மரணத்துக்குக் காரணமான தசரதன், தங்களைப் போன்றே புத்திர சோகத்தால் உயிர் துறக்க வேண்டும்! என்று சாபமிட்டுவிட்டு தாங்களும் உயிர் துறந்தனர். இந்த சாபமே தசரதனை புத்திர சோகத்துடன் மரணமடையச்

செய்தது. நல்லோர் இட்ட சாபம் அந்த பிறவியிலேயே பலித்ததல்லவா?

சில தவறுகளுக்கு, அப்பிறவியிலேயே தண்டனை விதிக்கப்படுவதை மகாபாரதத்திலும் காணலாம். விராட பருவத்தில் உள்ள ஒரு எடுத்துக்காட்டைக் காண்போம். பஞ்ச பாண்டவர்கள் 12 வருட காலம் வனவாசத்தை முடித்த பிறகு, ஒரு வருட காலம் யாருக்கும் தங்களைப் புலப்படுத்தாமல் மறைந்து வாழ வேண்டும் (அக்ஞாத வாசம்) என்பதால், அர்ச்சுனன் ஆலோசனைப்படி, மச்ச நாட்டிற்குச் சென்று வாழ முடிவு செய்தனர். அந்நாட்டு மன்னன் பெயர் விராடன். பஞ்ச பாண்டவர்களும், திரௌபதியும் மச்ச நாட்டிற்குச் சென்று வெவ்வேறு பெயர்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் விராட மன்னனிடம் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு வெவ்வேறு வேலைகளைச் செய்து வந்தனர். தருமர், தன்னை ஒரு அந்தணராக அறிமுகப்படுத்திக் கொண்டு விராட மன்னனின் ஆலோசகரானார். பீமன், தன்னை சமையல்காரனாக அறிமுகப்படுத்திக் கொண்டு, அரண்மனையில் தலைமைச் சமையல்காரனாகவும், நகுலன், குதிரைப்படைத் தலைவனாகவும், சகாதேவன், பசுக்கூட்டத்தை மேற்பார்வையிடுபவனாகவும், அர்ச்சுனன், பேடி உருவம் கொண்டு விராட மன்னனின் மகள் உத்தரைக்கு ஆடல் பாடல் கற்பிப்பவனாகவும் வாழ்ந்து வந்தனர். திரௌபதி விராட மன்னனின் மனைவிக்கு அலங்காரம் செய்யும் வண்ணப் பெண்ணாக (பணிப்பெண்) பணிபுரிந்து வந்தாள். 10 மாதங்கள் இவ்வாறு கழிந்தன.

விராட மன்னனின் மைத்துனன் கீசகன், ஒருநாள் திரௌபதியைப் பார்த்து, அவள் அழகில் மயங்கி அவளை அடைய முயன்ற போது, அவள் அரசவைக்கு ஓடிவந்து தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினாள். ஆனால் மன்னன், கீசகனைத் தடுக்கவில்லை. தருமராலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. அப்போது சூரியனால் ஏவப்பட்ட ஒரு கிங்கரன், கீசகனை உதைத்துத் தள்ளி மறைந்தான். பிறகு ஒருநாள் கீசகன் திரௌபதியை அடைய முயற்சி செய்த போது, பீமன் சூழ்ச்சி செய்து கீசகனைக் கொன்றான்.

அஞ்ஞாத வாசம் முடிய இன்னும் ஒரு வார காலமே இருந்த போது, பாண்டவர்களின் இருப்பிடத்தை எப்படியாவது அறிந்து கொள்ள துரியோதனன் முயற்சி செய்தான். எந்த நாட்டில் மாதம் மும்மாரி பொழிகிறதோ? அங்கு பாண்டவர்கள் இருப்பார்கள் என பீஷ்மர் கூற, ஒற்றர்கள் மூலம் அத்தன்மையுடைய நாடு மச்ச நாடு என்பதை துரியோதனன் அறிந்து கொண்டான். அந்நாட்டின் ஒரு பகுதியில் உள்ள பசுக் கூட்டங்களைக் கவர்ந்தால், மச்ச நாட்டு படைக்கு உதவ பாண்டவர்கள் வருவார்கள். அப்போது அவர்களை வெளிப்படுத்தி, மீண்டும் காட்டிற்கு அனுப்பலாம் என்பது அவன் திட்டம். கௌரவப்படை திரிகர்த்தராஜன் தலைமையில் மச்ச நாட்டிற்குச் சென்றபோது, விராட மன்னன் தன் படைக்கு தலைமையேற்று கௌரவப் படையை எதிர்த்தான். திரிகர்த்தராஜன் விராட மன்னனை வீழ்த்தி தன்

தேர்க்காலில் கட்டினான். அக்காலத்தில் ஒரு மன்னன் தேர்க்காலில் கட்டப்படுவது மிகப் பெரிய தண்டனையாக, அவமானமாகக் கருதப்பட்டது.

விராட மன்னன் தேர்க்காலில் கட்டப்பட்ட நிகழ்வுக்கும், 'விதிக்கப்படுபவை' தலைப்புக்கும் என்ன தொடர்பு? என்று கேட்கலாம். இப்பிறவியில் செய்யும் சில தவறுகளுக்கு, உடனேயே தண்டனை விதிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தி எச்சரிக்கை செய்யவே விராட பருவ நிகழ்வுகளைக் குறிப்பிடுகிறேன். விராடன் அரசவையில் திரௌபதி ஓடிவந்து கீசகனிடமிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு மன்னனிடம் முறையிட்ட போது, கீசகனைத் தடுக்க முயலாமல் வாளாவிருந்த பாவத்தின் கூலியே போர்க்களத்தில் விராடன் தேர்க்காலில் கட்டப்பட்டது எனலாம். விராட மன்னன் பிறகு பீமனால் விடுவிக்கப்பட்டான்.

விராட பருவத்தில் மற்றொரு உண்மையும் புலப்படுகிறது. பெற்றோர் புரியும் பாவச்செயல் பிள்ளைகளுக்கும் தண்டனையைப் பெற்றுத் தரும்! என்பதை அறிவோம். மச்ச நாட்டின் மற்றொரு எல்லையில் குவிந்த கௌரவப் படையை எதிர்க்க விராட மன்னனின் புதல்வன் உத்தரன் தலைமையில் படை கிளம்பியது. உத்தரனின் தேரை பேடி வடிவில் இருந்த அர்ச்சுனன் செலுத்தினான். போர்க்களத்தை அடையும் முன்னரே உத்தரன் போர் புரிய பயந்து தேரிலிருந்து இறங்கி ஓடினான். அர்ச்சுனன் அவனைப் பிடித்து

தேர்க்காலில் சிறிது நேரம் கட்டி வைத்தான். விராட மன்னன் நல்லாட்சி புரியும் மன்னனாக இருந்தும், திரௌபதியைக் காப்பாற்ற முன்வராததால் அப்பாவத்திற்கு தண்டனையாக தேர்க்காலில் கட்டப்பட்டான். அவன் செய்த அந்த பாவச் செயலால், அவன் மகனும் தேர்க்காலில் கட்டப்பட்டான்.

மற்றொரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். போர் முடிந்த பின் தருமர் மிகவும் வருத்தத்தில் ஆழ்ந்திருந்தார். தமையனான கர்ணனைப் பகைவன் என்று நினைத்து கொன்று விட்டோமே! என்று, தன் தம்பிகளிடம் கூறிப் புலம்பினார். அதைக் கண்ட நாரதர் தருமரைப் பார்த்து, கர்ணனுடைய மரணத்திற்கு யாரெல்லாம் காரணம் என்பதைக் கீழ்க்கண்டவாறு விளக்கினார்.

அரசர்களுக்கு வில்வித்தை கற்றுத் தருவதில்லை என்ற சபதம் கொண்டிருந்த பரசுராமரிடம் சென்று கர்ணன் தன்னை பிராமணன் என்று கூறி வில்வித்தை பயின்றான். ஒரு நாள் கர்ணன் மடியில் தலை வைத்து பரசுராமர் உறங்கிக் கொண்டிருந்த போது ஒரு கொடிய வண்டு கர்ணனின் தொடையைத் துளைத்து இரத்தம் பீறிடச் செய்தது. கண்விழித்த பரசுராமர் அவ்வளவு வலியைத் தாங்கும் வலிமை படைத்த அவன் யார்? என்ற உண்மையைக் கூறுமாறு கேட்க, கர்ணன் தான் அந்தணன் அல்ல என்று ஒப்புக் கொண்டான். கோபமடைந்த பரசுராமர் தான் சொல்லிக் கொடுத்த வித்தைகள் அனைத்தும், தக்க சமயத்தில் அவனுக்கு மறந்து விட

வேண்டுமென்று சாபமிட்டார். ஒருநாள் கர்ணனுடைய தேர்ச்சக்கரத்தில் அந்தணர் ஒருவருடைய பசுவின் கன்று அகப்பட்டு மாண்டது. அப்போது அந்தணர், 'போரில் உன் தேர்ச்சக்கரம் மண்ணில் புதைந்து பகைவனால் உனக்கு மரணம் வரக்கடவது' என்று சாபமிட்டார். இவை தவிர, போர்க்களத்தில் இந்திரன் மறையவனாக வேடமிட்டு வந்து கர்ணனின் கவச குண்டலங்களை யாசித்துச் சென்றான். இவை யாவும் கர்ணனின் மரணத்திற்கு காரணங்களாக அமைந்தன, என்று கூறி தருமரைத் தேற்றினார்.

இப்பிறவியில் பிறர் துன்பத்தைப் போக்கும் போது, முன்வினையின் தீவிரம் குறைய இறைவன் அருள் புரிவார் என்பது உறுதி. ஓர் எடுத்துக்காட்டைப் பார்ப்போம். வயதான வறியவர் ஒருவர் பிச்சையெடுத்துக் கொண்டிருப்பதை கிருஷ்ணரும், அர்ச்சுனனும் பார்த்தனர். அர்ச்சுனன் அவரிடம் தங்க நாணயங்கள் கொண்ட முடிச்சு ஒன்றைத் தர, வறியவர் அதை ஓரிடத்தில் பத்திரப்படுத்தி விட்டு உறங்கினார். மறுநாள் காலை அவர் பார்த்த போது அது திருடு போய்விட்டிருந்தது. அதை அறிந்த அர்ச்சுனன் அவரிடம் ஒரு விலையுயர்ந்த இரத்தினக் கல்லைக் கொடுத்து அதை விற்று வறுமையைப் போக்கிக் கொள்ளுமாறு கூறினான். வறியவர் அதை ஒரு பானையில் பத்திரமாக யாருக்கும் தெரியாமல் வைத்து விட்டு உறங்கினார். மறுநாள் விடியற்காலையில் அவர் மனைவி அந்த பானையை எடுத்துக் கொண்டு ஆற்றுக்குச் சென்று நீர் கொண்டு

வந்தாள். இருட்டில் அவள் இரத்தினக் கல்லை பார்க்காததால், நீர் எடுக்கும் போது இரத்தினக்கல் ஆற்றில் விழ, அது ஒரு மீனின் வாயில் சென்றது. தூங்கி எழுந்த வறியவர், பானையில் கல் இல்லாததைக் கண்டு வருந்தினார். மூன்றாம் நாள் வறியவர் யாசித்த போது இம்முறை கிருஷ்ணர் அவரிடம், காலணா நாணயங்கள் இரண்டைக் கொடுத்துச் சென்றார். அப்போது மீனவன் வலையில் ஒரு மீன் தவிப்பதைக் கண்டு, அதை வாங்கி ஆற்று நீரில் விட்டால் அது உயிர் பிழைக்குமே! என்று நினைத்த வறியவர், தன்னிடமுள்ள 2 காலணா நாணயங்களை மீனவனிடம் கொடுத்து மீனை வாங்கி ஆற்றில் விட எடுத்துச் சென்ற போது, அவர் கையில் மீன் வாயிலிருந்த ரத்தினக்கல் விழுந்தது. மகிழ்ச்சி மிகுதியால் வறியவர் 'நான் கண்டுபிடித்து விட்டேன்' என்று கூவ, அவ்வழியாக வந்த ஒருவன், தான் இவரது தங்க நாணய முடிச்சை எடுத்து வைத்துள்ளதைக் கண்டுபிடித்து விட்டதாகக் கத்துகிறார் என்று நினைத்து, அவரிடம் மன்னிப்பு கேட்டு, தங்க நாணய முடிச்சை திருப்பித் தந்து விட்டான். மீனைக் காப்பாற்ற தன்னிடமிருந்த 2 காலணா நாணயங்களையும் கொடுத்ததற்கு இவர் வறுமையைப் போக்க, இறைவன் காட்டிய கருணை மெய் சிலிர்க்க வைக்கிறது. பிறர் துயர் போக்கியதற்குரிய பலன் இப்பிறவியிலேயே தரப்படுவதைக் காண்கிறோம்.

ஒரு தூய வெள்ளை வேஷ்டியில் சிறிதளவு அழுக்குபட்டாலே, நாம் உடனே அதை அலசி அழுக்கை நீக்குகிறோம். ஆனால் கரித்துணியில் ஏதேனும் அழுக்கு

பட்டால் உடனே நீக்க முயலாமல், பிறகு வெந்நீரில் துணி சோடாவைப் போட்டு அதில் கரித்துணியை ஊறவைத்து பிறகு கல்லில் அடித்துத் துவைக்கிறோம். அதுபோல நல்லவர்கள் சிறு தவறு செய்தாலும், அந்த பிறவியிலேயே தண்டனை அனுபவிப்பதைக் காண்கிறோம். அவர்கள் கணக்கில் பாவம் சேர இறைவன் விரும்புவதில்லை. வாங்கிய கடனை உடனே செலுத்தி விட்டால், பிறகு வட்டியும் அசலுமாகச் சேர்த்து நிறைய செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படாதல்லவா?

மகாபாரதப் போர் முடிந்த பிறகு, ஒரு நாள் ஸ்ரீகிருஷ்ணரிடம் ருக்மணி தேவி, "குரு துரோணர், பீஷ்மர் போன்ற ஆன்றோர்களும், கர்ணன் போன்ற கொடையாளியும் போரில் மரணமடைய, பாண்டவர்களுக்கு ஏன் தாங்கள் உதவி செய்தீர்கள்?" என்று கேட்க, பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அளித்த பதில், "பலர் முன்பாக திரௌபதி துகிலுரியப்படுவதைத் தடுத்து நிறுத்தாமல் இவர்கள் அமைதியுடன் இருந்தார்கள். தடுக்க முயலவில்லை, இந்த ஒரு பாவத்தால் அவர்களது மேன்மை முழுவதும் நீங்கியது. கர்ணன் கொடையாளியாக இருந்தும், அபிமன்யு இறக்கும் தருவாயில் நீர் கேட்ட போது, தன் அருகில் நீர் இருந்தும் எடுத்து கொடுத்து அபிமன்யுவின் தாகத்தைத் தீர்க்கவில்லை. அபிமன்யுக்கு உதவினால், தன் நண்பன் துரியோதனன் தன்னைத் தவறாக நினைக்கக் கூடும் என்று எண்ணி உதவாமல் இருந்தான். அச்செயல் அவன் வாழ்நாள் முழுவதும் செய்த நற்செயல்களின் பயனை அழியச்

செய்தது. ஆகவேதான் இவர்கள் மரணமடைய பாண்டவர்களுக்கு உதவினேன்” என்பதாகும். அவரது பதில் அனைவருக்கும் புகட்டும் பாடம் மகத்தானது.

நன்றி கெட்டவர்களுக்கு இப்பிறவியிலும், மறுபிறவியிலும துன்பம் ஏற்படும் என்கிறது பஞ்ச தந்திரம். மகாபாரதத்தில் பீஷ்மர் பாண்டவர்களுக்குக் கூறிய ‘நன்றி கொன்றவன் கதை’ சிந்திக்கத்தக்கது. கௌதமன் என்ற ஒருவன் நற்குணங்கள் இன்றி வாழ்பவன். ஒரு சமயம், அவன் பொருளீட்ட சில வர்த்தகர்களுடன் நெடுந்தொலைவு சென்றான். வழியில் யானை தாக்கி அவனுடன் சென்றவர்கள் மாண்டனர். இவன் மாத்திரம் தப்பித்து ஓடினான். ஒரு சோலையை அடைந்து அங்கிருந்த ஆலமரத்தடியில் உறங்கினான். அந்த மரத்தில், நாடீசங்கன் என்ற கொக்கு வாழ்ந்து வந்தது. கண்விழித்த கௌதமனுக்கு இனிய கனிகளைத் தந்து பசியாற்றியது. அவனுடன் உரையாடி அவனது வறிய நிலையை அறிந்தது. அவனுக்கு உதவ விரும்பியது. சற்று தொலைவில் வாழும் அரக்கர் கூட்டத் தலைவனும் தன் இனிய நண்பனுமான விரூபாட்சனனிடம் அனுப்பி தான் அனுப்பியதாகச் சொல்லுமாறு கௌதமனிடம் கூறியது. கௌதமன் அவ்வாறே செய்தான். விரூபாட்சன் தன் அன்பு நண்பன் நாடீசங்கன் அனுப்பியதால், கௌதமனுக்கு நிறைய பொருளுதவி செய்தான். அவற்றை எடுத்துக் கொண்டு நாடீசங்கனிடம் சென்றான். கொக்கு மிகவும் மகிழ்ந்து அன்றிரவு அவனுக்கு கனிகளைக் கொடுத்ததுடன், இலைகளையும், மலர்களையும், பரப்பி